**மதுராவல பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதுராவல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 தேறிய சொத்துக்களின் குறைவு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் தேறிய சொத்துக்களின் குறைவு பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | 2013 | 2012 |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 35,536,592 | 35,071,625 |
| தொழிற்படு மூலதனம் | 18,960,612 | 22,557,568 |
| தேறிய சொத்துக்கள் | 54,497,204 | 57,629,193 |

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

2006 ஆம் ஆண்டின் போது மதுராவல பிரதேச சபை புலத்சிங்ஹல பிரதேச சபையிலிருந்து வேறாக்கப்பட்டு வேறான கம்பனியொன்றாக ஆரம்பிக்கப்படுகையில் வழங்கப்பட்டிருந்த கணக்கு மீதி குறித்த கணக்குகளுடன் சீராக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அம் மீதிகள் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு புலத்சிங்ஹல பிரதேச சபைக் கணக்காக வேறான கணக்கொன்றிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் இதில் மீளாய்வாண்டிற்கான சொத்துக்களினதும்

பொறுப்புகளினதும் மீதிகளுக்கு நேர்ந்த தாக்கம் கணக்குகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

வேலையை இராஜினாமாச் செய்தல், மரணித்தல், நீதிமன்றத் தீர்ப்புகளில் சிறைவாசம் மற்றும் இடமாற்றப்பட்டிருந்த 6 ஊழியர்களிடமிருந்து ரூபா 91,900 கூட்டுத்தொகையான கடன் மீதிகளில் 4 ஆண்டுகளாக எவ்வித தவணைப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றின் ஏற்பாடுகளுக்கும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கும் இணங்கியிராமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப் பிரமாணம் 1646 | வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் ஒவ்வொரு மாத இறுதியை அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் தினத்திற்கு முன்னர் 268(அ) பொது படிவத்தில் எழுதப்பட்ட பயணங்கள் தொடர்பான மாதாந்தப் பொழிப்பொன்றின் மூலப் பிரதி தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் எந்த வாகனம் தொடர்பிலும் மாதாந்தப் பொழிப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | குழாம் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு தொடர்பில் 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 3,192,306 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக

முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,278,368 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 2,026 | 1,741 | 923 |
| (ii) | வாடகை | 23 | 23 | 188 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 314 | 314 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 4,229 | 7,344 | 5,053 |

**2.2.2 வீதவரி மற்றும் ஏக்கர் வரி**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 1415 ஆதனங்களிலிருந்து ரூபா 682,683 தொகையான வீதவரி மீதியும், 15 ஆதனங்களிலிருந்து ரூபா 5,626 தொகையான ஏக்கர் வரி மீதியும் நிலவியதுடன் கணக்காய்வுத் தினமாகிய 2014 பெப்ரவரி 12 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கைத்தொழில் மற்றும் வியாபார வரி**

2006 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து வரும் 42 வியாபாரங்களுக்குரித்தான நிலுவையான கைத்தொழில் வரித்தொகையான ரூபா 29,770 தொகையும், 29 வியாபாரங்களிற்குரித்தான நிலுவையான வியாபார வரித் தொகையான ரூபா 8,950 தொகையும் கணக்காய்வுத் தினமாகிய 2014 பெப்ரவரி 12 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 காணி விற்பனை வரி**

2013 ஆம் ஆண்டின் போது 4 காணி விற்பனைகளின் மூலம் 1 சதவீதம் வரித்தொகையாக ரூபா 1,031,560 தொகை அறவிடப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம், அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள காணி கூறாக்கப்பட்டு அல்லது ஏலவிற்பனை செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகையில் அக் காணி விற்பனையில் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தில் 1 சதவீதத்திற்குச் சமமான வரி சபையால் அறவிடப்பட வேண்டிய போதிலும் அறவிடப்பட்ட தொகை காணி மதிப்பீட்டுப் பெறுமதியில் 1 சதவீதமாகக் காணப்பட்டதுடன் எந்த சந்தர்ப்பத்திலும் காணியின் விற்பனைப் பெறுமதியில் 1 சதவீதம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 3,500,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 5,053,294 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) கொங்கிரீட் தூண்கள் உற்பத்தி செய்தல்**

விற்பனை செய்யப்படுவதற்கும் சபைக்குரித்தான மயானக் காணிகளினதும் பொதுக் காணிகளினதும் எல்லை வேலிகளுக்காக தேவையான கொங்கிரீட் தூண்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கு 2011 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தின் படி 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 33,493 தொகையும் ரூபா 43,868 தொகையும் செலவிட்டு 200 கொங்கிரீட் தூண்கள் நாட்டப்பட்டிருந்த போதிலும் இவற்றில் 160 கொங்கிரீட் தூண்கள் 2014 பெப்ரவரி 19 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது சபை வளாகத்தில் காணப்பட்டன.

**(ஆ) அழகிற்காக மரங்களும் பூச்சாடிகளும் தயாரித்தல்**

2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த மேற்குறித்த செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் XXIV ஆம் பந்தியின் பிரகாரம் பிரதேச சபையொன்று வணிக மற்றும் கைத்தொழில் தொழில் முயற்சியில் ஈடுபடுத்தப்படுவதற்காக அமைச்சரின் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த மேற்குறித்த செயற்திட்டத்திற்காக அவ் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. பின்னர் 2012 திசெம்பர் 04 ஆம் திகதி அமைச்சரின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளர் நாயகம் (மே.மா) இனால் அவ் அமைச்சரின் அங்கீகாரத்திற்கான பரிந்துரை செய்வதற்கான இயலுமை இல்லாததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) 2011 முதல் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மேற்குறித்த செயற்திட்டத்திற்காக ரூபா 51,700 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்த போதிலும் மொத்த வருமானம் ரூபா 18,457 தொகையானமையால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட இலாபம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(iii) உற்பத்தி செய்யப்பட்ட அழகிற்கான மரங்களும் பூச்சாடிகளும் விற்பனை செய்யப்படுவதற்கான சந்தை இன்மையால் ரூபா 14,161 தொகையான 12 உற்பத்திப் பொருட்களும், ரூபா 32,635 தொகையான பகுதியளவில் முடிவுறுத்தப்பட்ட பொருட்களும் மூலப்பொருட்களின் இருப்பும் 2014 பெப்ரவரி 18 ஆம் திகதி வரையிலும் சபையில் காணப்பட்டது.

**(இ) கேகாலை பட்டவல வீதி சரளைக் கற்கள் இடப்பட்டு அபிவிருத்தி செய்தல்**

2013 ஆம் ஆண்டின் போது மகநெகும ஏற்பாட்டின் கீழ் கிடைக்கப்பெற்ற ரூபா 500,000 தொகையில் மேற்குறித்த வீதி 3 கட்டங்களில் சரளைக்கற்கள் இடப்பட்டிருந்தமை 2014 பெப்ரவரி 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இதில் 2 ஆம் கட்டம் சபையால் மகநெகும கிராம வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(i) சபையால் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளைக் குறிப்பாக இனங்காண்பதற்கு இயலுமான வகையில் வீதி மறுசீரமைக்கப்பட்ட பகுதியின் ஆரம்ப மற்றும் முடிவை குறிப்பாகக் காண்பித்து வீதித் திட்டமொன்றைக் கோவையில் உள்ளடக்கியிருக்கவில்லை.

(ii) 2013 யூலை 26 ஆம் திகதிய மகநெகும ஆலோசனை இல. 2013/03 இன் படி, வீதியின் குறித்த கட்டத்தின் ஆரம்ப மற்றும் முடிவுப் பகுதிகளின் இடது பக்க மதகில் செயற்திட்ட இலக்கம் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு குறிப்பிடப்பட்டிராததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு சபையால் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளைக் குறிப்பாக இனங்காண்பதற்குச் சிரமமாகக் காணப்பட்டது.

(iii) துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிகச் செயளரின் (அபிவிருத்தி) 2013 மே 05 ஆம் திகதிய மகநெகும ஆலோசனை இல. 2013/02 இன் 5.1 ஆம் பந்தியின் படி, இருபக்க மதகுகளின் உயரம் 9 – 12 அங்குலம் அளவில் காணப்பட வேண்டிய போதிலும் மேற்குறித்த வீதியின் மதகுகளின் உயரம் 4 அங்குலமாகக் காணப்பட்டன.

**(ஈ) நாகல்ல லாவலுகஹஹேன வீதி நிர்மாணிப்பு**

மகநெகும வீதி அபிவிருத்தி நிகழச்சித்திட்டத்தின் கீழ் மேற்குறித்த வீதியின் ஆரம்பம் 110 மீற்றர்கள் அளவு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 481,022 தொகையான செலவிலும், இறுதி 112.5 மீற்றர் அளவு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 498,796 செலவிலுமாக வீதி முற்றாக சரளைக் கற்கள் பதிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 யூலை 26 ஆம் திகதி மகநெகும ஆலோசனை இல. 2013/03 இன் படி, ஒவ்வொரு கட்டத்திலும் வீதியின் ஆரம்ப மற்றும் முடிவுப்

பகுதிகளில் இடது பக்க மதகில் செயற்திட்ட இலக்கம் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிகச் செயளரின் (அபிவிருத்தி) 2013 மே 05 ஆம் திகதிய மகநெகும ஆலோசனை இல. 2013/02 இன் 5.1 ஆம் பந்தியின் படி, இருபக்க மதகுகளின் உயரம் 9 – 12 அங்குலம் அளவில் காணப்பட வேண்டிய போதிலும் மேற்குறித்த வீதியின் மதகுகளின் உயரம் 5 அங்குலமாகக் காணப்பட்டன.

**3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

காணி கூறாக்கப்பட்டு ஏலவிற்பனையிடப்படுவதற்காக துணைக் கூறாக்கல் அங்கீகரிக்கப்பட்ட 1 ஏக்கர், 3 ரூட், 24 பேர்ச் காணியின் உள்ளக வீதி தாரிடப்படுவதற்காக சபையால் ரூபா 654,318 தொகை 2012 செப்தெம்பர் 14 ஆம் திகதி அறவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 பெப்ரவரி 12 ஆம் திகதி வரையிலும் வீதி முறைமையின் வேலை ஆரம்பிக்கப்படாது குறித்த பண வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) செயற்திட்ட நிர்வாகம்